கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திருமதி.T.சசிகலா, **M.B.A,M.Phil, P.G.D.C.A**

ந.க.எண். 623/2023/எப் 1 நாள். 31.01.2024

பொருள்: மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – கோபிசெட்டிபாளையம் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – மொடச்சூர் கிராமம் வார்டு – C. பிளாக்–20 . T.S.No. – 7/2 இல் – 2675 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVALNO.180/2023 என எண்ணிடப்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது

பார்வை:
1. அரசாணை எண 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.10.2020
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12843/2022/டி.பி.–2 நாள் 20.10.2022
3. ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணையவழி கடிதம் ERD/S9CAK7GD/2022/TCP நாள்:11.03.2023.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்20.03.2023 .
5. தானப்பத்திர ஆவண எண்.1336/2023, நாள்.20.04.2023
6. ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணையவழி திட்ட அனுமதி ERD/S9CAK7GD/2022/TCP நாள்:08.05.2023
7. 12.06.2023 ஆம் நாள் இட்ட மனுதார்ர் R.S. வேலு விண்ணப்பம்
8. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு பட்டா மாறுதல்உத்தரவு எண்.TR 2023/10/31/000408SD நாள்.13.09.2023
9. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு பட்டா மாறுதல் உத்தரவு எண்.TR 2023/10/31/000412SD நாள்.18.09.2023
10. அரசு பொறியியல் கல்லூரி (IRTT) அறிக்கை எண்.IRTT/ CE35/ 2023 /24/Test No.51/873 நாள்.18.12.2023
11. 23.01.2024 ஆம் நாளிட்ட பொறியர் பிரிவு குறிப்பு
12. நகர்மன்ற தீர்மான எண்:766 நாள்.30.01.2024

R.S. வேலு
K. Suresh

****

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் கிராமம், வார்டு–C, பிளாக் – 20. T.S.No. – 7/2 இல் – 2675 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 3 இல் காணும் கடிதத்தில் சாலை வரைபட ஒப்புதல் அளித்து மனுதாரருக்கும் அதன் நகல் இவ்வலுவலகத்திற்கும் வரப்பெற்றது.

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில்அமையும் பொது ஒதுக்கீடுகளை பார்வை 5 இல் கண்டவாறு நகராட்சிக்கும் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய துறைக்கும் தானமாக தங்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டது பார்வை 6 இல் கண்டவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.180/2023 என எண்ணிடபட்டு தொழில் நுட்ப ஒப்புதல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது

மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனையிடங்களை தனித்தனியாக உட்பிரிவு செய்தும் மற்றும் பொது ஒதுக்கிடுகளை ஆணையாளர் பெயருக்கு உட்பிரிவு செய்தும் பார்வை 8 மற்றும் 9 இல் கண்டவாறு வட்டாட்சியரின் உத்தரவு வரப்பெற்றது. மேலும், மேற்படி மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு

Scanned with OKEN Scanner

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவின்படியும், பொறியர் பிரிவின் 23.01.2024, ஆம் நாளிட்ட குறிப்புகளின் பேரிலும் பார்வை 12 இல் காணும் தீர்மானத்தில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

எனவே, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின்படியும், பார்வை 10 இல் காணும் அரசு பொறியில் கல்லூரியின் மூன்றாம் நபர் தர சான்றின்படியும் பொறியியர் பிரிவின் குறிப்புகளின் அடிப்படையிலும் மற்றும் பார்வை 12 இல் காணும் நகர்மன்றத்தீர்மான ஒப்புதலின் பேரிலும் வார்டு-C, பிளாக் – 20. T.S.No. – 7/2 இல் – 2675 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVALNO.180/2023 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் மற்றும் கீழ் காணும் சிறப்பு நிபந்தனைக்கு உட்பட்டும் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

இம்மனைப்பிரிவில் வடிகால், கழிவு நீர் செல்வது தொடர்பாக பொது பிரச்சனை ஏற்படும் போது மனைப்பிரிவு உரிமையாளரே சொந்த பொறுப்பில் தீர்வு செய்ய வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

இணைப்பு

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVALNO.180/2023 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி.

பெறுநர்
திரு. R.S. வேலு ,V.D.செந்தில்மோகன்,
M.B. பழனிச்சாமி மற்றும் K.சுரேஷ்
56 கோடீஸ்வரா நகர்,
கோபிசெட்டிபாளையம்.

நகல்

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்.ஈரோடு ,
2. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.
3. 1 எண் இணை சார்பதிவாளர், கோபிசெட்டிபாளையம்
4. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம்.
5. நகராட்சி பொறியாளர்
6. வருவாய் ஆய்வாளர் (காலியிட வரி நிர்ணயம் செய்ய)

R.S. Velu
V.D.
K. Suresh

Scanned with OKEN Scanner